செய்தி வெளியீடு எண். 790 நாள்.27.12.2011

## மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள், சென்னை காந்தி மண்டபத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள், சென்னை காந்தி மண்டபம் மற்றும் தியாகிகள் மணிமண்டபம், மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம் மற்றும் அங்கு அமைந்துள்ள பல்வேறு நினைவிடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று (27.12.2011) மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள், சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தை ஆய்வு செய்யும் பொருட்டு புறப்பட்டு சென்றார். முதலாவதாக, கிண்டி காந்தி மண்டபத்தில் உள்ள கலையரங்கினையும், பூங்காவினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் தியாகிகள் மணிமண்டபத்திலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகைப்படங்களையும், மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபத்தில் உள்ள மொழிப்போர் தியாகிகளின் புகைப்படங்களையும் பார்வையிட்டார். தியாகிகள் மணிமண்டபத்தில் 1245 சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகைப்படங்களும், மொழிப்போர் தியாகிகளின் மணிமண்டபத்தில் 246 மொழிப்போர் தியாகிகளின் புகைப்படங்களும் வைக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பக்தவச்சலம் நினைவிடம், இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம், காமராசர் நினைவிடம் ஆகியவற்றையும் பார்வையிட்டார். மண்டபம் மற்றும் நினைவிடங்களை நல்ல முறையில் பராமரிக்கவும் அறிவுரை வழங்கினார். சிறிய பழுது தானே என்று நினைக்காமல் பழுதுகள் ஏற்பட்ட உடனேயே உடனுக்குடன் அதனை சரிசெய்ய பொதுப்பணித்துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, புனரமைக்கப்பட உள்ள காந்தி மண்டபத்தின் திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடங்களை மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சருடன் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், துணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு.கு.தாணப்பா, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.கே.ஏ.ராஜசேகரன், உதவி பொறியாளர் திரு.அருண்மொழி, உதவி மின்பொறியாளர் திரு.திருமால், திருமதி.சக்தி கோதண்டம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.சேகர், திரு.முருகேசன் உடன் சென்றனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.